
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | மே 1993 | இதழ் 5



வெளியிடுவோர் :

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | |
|---|---|---|
| ஞாயிறு | : | காலை 9-30—11-00...காலை ஆராதனை |
| ,, | : | பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி |
| ,, | : | மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | : | மாலை 7-15—8-30...வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | : | மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1. உண்மையான ஆராதனை எது? 1-8
2. உலகின் சகல பகுதிகளுக்கும் சத்தியம் ஒன்றே! 9-11
3. ஆதிக்கம் செலுத்தும் பெண் 12-14
4. ''பாஸ்டர் என்றால் யார்? 15-18
5. இச்சை 19-22
6. தேவனோடு எப்போதுமே நீடித்து வாழ்வது எப்படி? 23-26
7. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் தேவையா? 27
8. என் ஜெபங்கள் கேட்கப்படுவதில்லையே ஏன்? 28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 MAY—1993 Issue 5


**ஆசிரியவுரை**

## உண்மையான ஆராதனை எது?

'மின்னுவதெல்லாம் பொன் அல்ல', 'வெளுத்தது எல்லாம் பால் அல்ல' என்று முதுமொழிகள் உண்டு. மின்னுதல் பொன்னுக்குண்டான குணங்களில் ஒன்று. வெண்மையாக இருப்பது பாலுக்குண்டான பண்புகளில் ஒன்று. ஆனால் மின்னுகின்ற எல்லாமே தங்கத்திற்குரிய சிறப்பைப் பெற முடியுமா? அல்லது வெண்மையாக இருக்கின்ற எல்லாமே பாலின் தன்மையைத்தான் அடையமுடியுமா? ஏதாவது ஒரு குணம் மட்டுமே ஒரு பொருளுக்குண்டான மொத்தப் பண்புக்குப் பிரதிநிதியாக இருக்கமுடியாது எல்லாக் குணமும், தன்மையும் ஒன்றுசேரும் போதுதான், ஒரு பொருளின் ஒட்டுமொத்தச் சிறப்பு வெளித்தெரியும். இந்தக் கருத்தை அனைவரும் ஒப்புக் கொள்ளவே செய்வர்.

இதைப்போலத் தான் ஆராதனையும்கூட. ஆராதனைக்கென்று சில ஒழுங்குகளும், கட்டளைகளும் நிச்சயமாக வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் ஒன்றுசேரச் செய்யப்படும்பொழுது தான் ஆராதனையின் மேன்மை வெளிப்படும். அதன்மூலம் பயனும் கிட்டும். இவைகளை விடுத்து ஆராதனை என்ற பெயரில் ஒழுங்குகளும், கட்டளைகளும் புறக்கணிக்கப்பட்டு மீறப்படுமானால் ஆராதனைகள் அர்த்தமற்ற சடங்குகளாகிவிடும்.

ஆராதனை என்பது பயமும், பக்தியும் ஒன்று சேர்ந்த நிலையில் செய்யப்படும் ஒரு செயல்.

உலகெங்கிலும், ஞாயிறுதோறும் கணக்கிலடங்காத ஆராதனைகள், தேவனைத் துதிக்கும்படியாக ஏறெடுக்கப்படுகின்றன. ஆனால் எல்லாமே தேவனால் அங்கீகரிக்கப்படுகிறதா என்பது கேள்விக்குரித்தான காரியம். ஆராதிக்கிற அனைவரும் ஆசைப்படுவதைப் போல், எல்லா ஆராதனைகளும் ஏற்றுக் கொள்ளப்படுவது உண்மையானால், ஏற்றுக் கொள்ளப்படாத வேற்று ஆராதனைகளும் உண்டு என வேதாகமம் ஏன் பட்டியலிட்டுக் காட்டவேண்டும்? வெளிப்படுத்தப்பட்ட ஒழுங்குகளுக்கும் கட்டளைகளுக்கும் விரோதமான ஆராதனைகள் மனிதனால் ஏறெடுக்கப்படும் என்று தேவன் எதிர்பார்த்ததாலா?

சரி, நீங்களும், நானும் தேவனை ஆராதிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம். ஆனால், உண்மையாக ஆராதித்தால் மட்டுமே தேவனிடத்திலிருந்து இம்மைக்குரிய ஆசீர்வாதத்தையும், மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ளமுடியும். அப்படியானால் எது உண்மையான ஆராதனை எனக் கண்டறிய தேவனுடைய வார்த்தைக்குச் செல்வது தான் செம்மையானது. செல்வோமா?

## வீணான ஆராதனை (Vain worship)

இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனிதனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாகச் சொல்லியிருக்கிறான் என்றார். (மத். 15:8,9), ஏசாயா தீர்க்கன், கிறிஸ்துவின் காலத்திற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்தவன். அவன் தன்னுடைய காலத்து மக்களின் நிலையைப் படம்பிடித்துச் சொல்லியதை, கிறிஸ்துநாதர், தன்னுடைய காலத்து மக்களின் மனநிலைக்கு எடுத்துக் கொள்கிறார் கிறிஸ்துவின் காலத்தில் இருந்த அதே நிலை, இன்று மீண்டும் இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் தொடர்கிறது. என்னே பரிதாபம்!

'வீண்' என்ற வார்த்தையின் பொருள், 'பிரயோசனமற்ற', 'எதற்கும் லாயக்கற்ற' என்பதே. எதற்குமே லாயக்கற்ற ஒரு காரியத்தைச் செயபவன் மதி கெட்டவனே. மதிகெட்டுப் போய் பிரயோஜனமற்ற ஒரு ஆராதனையைச் செய்வதில் என்ன நன்மை கிடைக்கும்? தங்களை பக்திமான்களென்று காட்டிக் கொள்ள மிகுந்த சிரமப்பட்ட பரிசேயர், வேதபாரகர் இவர்களுடைய

ஆராதனையை, கிறிஸ்துவானவர் வீணானது என் ஏன் சொன்னார்?

இதோ மூன்று காரணங்கள். 1) தங்கள் உதடுகளினால் அவரைக் கனம் பண்ணினார்கள். 2) அவர்கள் இருதயம் தூரமாயிருந்தது. 3) மனிதனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்தார்கள். தேவனுக்காகச் செய்யும் எந்த காரியத்திலும் 'இருதய நிலை'தான் மிகவும் முக்கியமானது. அதை அடிப்படையாக வைத்துதான் ஏற்றுக்கொள்வதோ, நிராகரிக்கப்படுவதோ நிர்ணயிக்கப்படுகிறது. உதடுகளின் பொய்யான புகழ்ச்சிக்கு மயங்க அவர் மனிதர் அல்ல. மனிதனுடைய உள்ளத்திலிருப்பது அவருக்கு நன்றாகவே தெரியும் (யோவா 2:25)

தேவனுடைய வார்த்தைக்கு எதிராக இன்றைக்கு கணக்கிலடங்காத மனித கோட்பாடுகள் 'ஆராதனைக்குள்' நுழைந்து விட்டது. இவைகளில் சிலவற்றை தன்னுடைய அறிவுக்குறைவினால் **'அறியாமலும்'**, பலவற்றை தன்னுடைய **ஆர்வம் மிகுதியினால் தேவனுக்குப் பிரியமாயிருக்குமோ என நினைத்து 'அறிந்தும்'** புகுத்திவிட்டான் மனிதன். இவ்விதமாய் நுழைந்த மனிதக் கோட்பாடுகள், சில நூறு ஆண்டுகள் பழக்கத்திலும் வழக்கத்திலும் வந்து விட்டபடியால், உண்மை நிலையை உணர்ந்து சீர்படுத்திக் கொள்ள முடியாத அளவுக்கு மனிதன் சென்றுவிட்டான். வேதாகமத்திற்கு, குறிப்பாக இன்று நம்மை கட்டுப்படுத்தும் புதிய பிரமாணத்திற்கு ஒவ்வாத மணி அடிப்பது தூபம் காட்டுவது, பாவ அறிக்கை, விசுவாசப்பிரமாணம், இசைக் கருவிகள், ஆடிப் பாடுதல் இப்படி இன்னும் பல சடங்குகள் மனிதனால் ஆராதனைக்குள் திணிக்கப்பட்டவைகளே. **இவைகளுக்கெல்லாம் புதிய பிரமாணத்தில் ஆதாரம் எங்கே உள்ளது?** பாரம்பரியப் பழக்கங்களே அல்லாமல் வேறென்ன?

இன்றைக்கு மெய்க் கிறிஸ்தவம் தழைக்க முடியாமல் தடுமாறுவதற்கு முக்கியக் காரணம் **'பாரம்பரியமே'** தான் பழகி விட்ட ஒரு செயல், தவறு என்று தெரியும்பொழுது கூட அதை விட்டொழிக்க மனிதன் மிகுந்த சிரமப்படுகிறான். தன்னுடைய குடும்ப காரியங்களில், வரவு செலவுகளில், தவறு நடந்துவிட்டது, அதனால் பாதிப்பு வரும் என்று தெரியவரும்பொழுது அவசரமாகச் செயல்பட்டு தன்னைத் திருத்திக் கொள்ளும் மனிதன், ஆவிக்குரிய காரியங்களில் சாவகாசமாகக்கூட, நேர்ந்துவிட்ட தவறை திருத்திக் கொள்ள முனைவதில்லையே, ஏன்? **பாரம்பரியத்தில் ஏற்பட்டு விட்ட பிடிப்பு** மோசேயின் பிரமாணத்தைக் காட்டிலும் பாரம்பரி-

யத்தினால் ஏற்பட்ட பழக்கம் பரிசேயருக்கும்; வேதபாரகருக்கும் பெரிதாய் பட்டபடியினால் தானே, அவர்களைப் பார்த்து, மாயக்காரரே! உங்களுடைய ஆராதனை வீண் என்றார் (மத் 15:6,7).

நண்பரே! நம்முடைய நிலை என்ன? நம்முடைய ஆராதனை எப்படிப்பட்டது? நம்மையும் பார்த்து உலகமீட்பர் 'மாயக்காரரே' என அழைக்கவேண்டுமா? அல்லது புதிய பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கும் தேவ ஆலோசனைகளை ஏற்று நடக்கப்போகிறோமா? நேரத்தை வீணாக்கும் வீண் ஆராதனையை விரட்டியடிப்போம்.

**அறியாமல் செய்யப்படும் ஆராதனை** (Ignorant worship)

'நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் என்கிறார் (அப் 17:23) அத்தேனே பட்டணத்தில் பவுலடியார், சீலா தீமோத்தேயு இவர்களின் வருகைக்காக காத்திருக்கிறார். காத்திருக்கும் தருணத்தில், அத்தேனே பட்டணத்தைச் சுற்றி வந்து ஜனங்களின் ஆன்மீக நிலையை அறிந்து கொள்ள முற்படுகிறார் (அப் 17:16). பிறகு புகழ்பெற்ற ''மார்ஸ் மேடையின்'' மீது நின்று பிரசங்கிக்கிறார், அந்த சிறப்புமிக்க பிரசங்கத்தில்தான் ''**அறியாமல் செய்யப்படும் ஆராதனையைக்**'' கோடிட்டுக் காட்டுகிறார்,

அப்போஸ்தலனாகிய பவுலின் காலத்தில் ரோம சாம்ராஜ்யத்தில் இரண்டு வகையான தத்துவங்கள் இருந்தன. ஒரு தத்துவத்தால் ஈர்க்கப்பட்டவர்கள் 'எப்பிக்கூரர்' என்றும், மற்றொரு தத்துவத்தால் கவரப்பட்டர்கள் 'ஸ்தோயிக்கர்' எனவும் அழைக்கப்பட்டனர். பவுலுடைய மார்ஸ்மேடைப் பிரசங்கத்தைக் கேட்டவர்களில் இந்த இரண்டு தத்துவங்களைச் சேர்ந்த ஞானிகளும் அடங்குவர் (அப் 17:18).

அப். 17-ம் அதிகாரத்தில் அறியாமல் ஆராதிக்க வந்தவர்களில் ஞானிகளும் அடங்குவர். அறிவு நிறைந்தவர்கள் எப்பொழுதும் ஆவிக்குரிய காரியங்களைச் சரியாகச் செய்வதில்லை போலும் உலக ஞானத்திற்கும், தேவனுடைய காரியங்களுக்கும் சம்பந்தமில்லை (I கொரி 1:25) என்று பவுலடியார் கொரிந்து பட்டணத்து மக்களுக்குச் சொல்கிறார். அத்தேனே பட்டணத்தாரின் 'அறியாத ஆராதனை' திருத்தப்பட வேண்டுமென்று பவுல் சுட்டிக் காட்டுகிறார். அறியாமல் தவறு செய்தாலும் அது தவறுதானே.' Ignorance of law is not an excuse' என்று சொல்வார்கள். **அதாவது, சட்டத்தை அறியாமல் இருப்பது 'சட்டத்தின் முன் மன்னிப்பாகாது.** சட்டத்தை அறிந்து கொண்டு, அதற்கு

கீழ்ப்படிந்து வாழ்வது ஒரு குடிமகனின் கடமை. அது உண்மையானால், தேவனை ஆராதிக்கும் நாம், ஆராதனைக் குண்டான ஒழுங்குகளை, சட்டங்களை அறிந்து கொள்வது அவசியம் தானே. அவசியம் மாத்திரம் அல்ல, **தவறு இருக்கும் பட்சத்தில் திருத்திக் கொள்வது அதைவிட முக்கியமானது.**

அத்தேனே, பட்டணத்து அறிவாளிகள், பவுலின் பிரசங்கத்தை ஏற்றுக் கொண்டார்களா? வசனம் 17:34 **'ஒருசிலர்'** தான் ஏற்றுக்கொண்டார்களென்று காண்கிறோமே இன்றும், உலகமெங்கிலும் கடவுளைப் பிரியப்படுத்துகிறோமென்று விதவிதமான பூஜைகள், பஜனைகள், தொழுகைகள் மற்றும் ஆராதனைகள் ஏறெடுக்கப்படுகின்றன. இவைகளனைத்தும் ஆராதனைச் சட்டத்துக்குள் வராத பட்சத்தில் பயனற்றவையே.

சரி, நம்முடைய ஆராதனை எப்படிப்பட்டது? அறிந்து, புரிந்து ஆராதிக்கிறோமா? தேவன் நமக்குக் கொடுத்துள்ள அறிவை சரியான நோக்கில் பயன்படுத்தாத பட்சத்தில், அந்த அறிவினால் பயனேதுமில்லை. அறியாத ஆராதனை அர்த்தமற்றது. அறியாத ஆராதனையை நம் அகராதியிலிருந்து அகற்றுவோம்.

**சுய இஷ்டமான ஆராதனை** (Will worship)

'இப்படிப்பட்டதான போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது. (கொலோ 2:23) **மனிதன் தன் சொந்த விருப்பத்தின்படி ஆராதிப்பது தான் 'சுய இஷ்டமான ஆராதனை' என்பது.** தன்னுடைய விருப்பம் என்று சொல்லும் பொழுதே, தேவனுடைய சித்தம், அங்கே இல்லையென்பது தானே அதன் பொருள். தேவனுடைய சித்தத்தின் கீழ் வராத ஒரு ஆராதனையை, அவர் எப்படி ஏற்றுக் கொள்வார்?

தேவ சித்தத்தை ஏற்றுக் கொண்டு நடவாமல், நம்முடைய விருப்பப்படி செய்யும்பொழுது, நாம் சர்வவல்ல தேவனின் அந்த ஞானத்திற்கு சவால் விடுவதாகத் தானே இருக்கும். அவருடைய வெளிப்பாடுகளை, திட்டங்களை எதிர்ப்பதற்கு இதைவிடச் சிறந்த வழி ஏதும் இல்லை. சர்வஞானியின் ஞானத்துக்கு சவால்விட்டு, அவருடைய திட்டங்களை எதிர்க்கவா தேவன் நம்மை இப்பூவுலகில் படைத்தார்? இல்லை, இல்லவே இல்லை.

உயர் மட்டக் கமிட்டியின் தீர்மானப்படியோ, மெஜாரிட்டி மக்களின் விருப்பப்படியோ ஆவிக்குரிய காரியங்களில் திருத்தங்களையும், மாற்றங்களையும் கொண்டு வருவது 'சுய இஷ்டமே. இவை தவிர கூட்டவும், குறைக்கவும், ஒட்டவும், வெட்டவும் நமக்கு அதிகாரம் யார் கொடுத்தது. அறிவின் மிகுதியும், ஆர்வத்தின் உச்ச கட்டமும் நம்மை ஆவிக்குரிய அழிவுக்கு அழைத்துச் சென்றுவிடக் கூடாது.

தேவனுடைய வார்த்தைகள் நமக்கு விளங்கும்படியாகவே கொடுக்கப்பட்டுள்ளது. (உபா 30:11-14) விளங்கும் படியாக கொடுக்கப்பட்டுள்ளதெனில் நம்முடைய ஆராதனை முறைகளில் பெருத்த முரண்பாடு காணப்படுகிறதே ஏன்? வேதாகமம் ஆராதனையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையா? சொன்னது புரியவில்லையா? புரிந்தது எனில் ஏன் இந்த நிலை? எங்கோ தவறு நடக்கிறது.

தவறுக்குச் சொந்தக்காரர்கள் நம்மை வழி நடத்தினவர்களும் நாமும் தான் சந்தேகமில்லை. ஆனால், நியாயத் தீர்ப்பில், நாம் வழிநடத்தினவர்கள் மீது பழிபோட முடியாது. (யோவா 12:48) 'சுய இஷ்டத்தை' எடுத்துப் போட்டு, 'தேவ சித்தத்திற்கு' நம்மைக் கீழ்ப்படுத்துவோம். சுய இஷ்டம் ஒரு போதும் நம்மை நீதியின் பாதைக்கு அழைத்துச் செல்லாது. பரமப் பிதாவின் சித்தம் மட்டுமே பரலோகத்திற்கும் பாதை காட்டும். அந்தப் பாதையில் வெற்றி நடை போடுவோம்.

**உண்மையான ஆராதனை (True Worship)**

'தேவன் ஆவியாயிருக்கிறார்', அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார். (யோவா 4:24) சமாரியா நாட்டில், சீகார் என்னுமிடத்தில் (யாக்கோபின் கிணறு உள்ளது. ஊழியத் நிமித்தம் மேற்கொண்ட பிரயாணக் களைப்பிற்கு இளைப்பாற கிணற்றண்டைக்கு கிறிஸ்து வந்தார். (யோவா 4:6). அப்பொழுது அங்கு வந்த சமாரிய ஸ்திரீயுடன் நடந்த உரையாடலில் தான் இந்த வசனம் வருகிறது.

தன்னுடைய நீண்ட உரையாடலில் கிறிஸ்துவானவர், சாதாரண மனிதர் அல்ல. அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதை அறிந்து கொள்கிறாள். [யோவா 4:19]. தனக்குள்ளாக இருந்த சந்தேகத்தைப் போக்க சரியான நபர் கிடைத்தார் என நினைத்ததாலோ என்னமோ, ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கி-

றாள். உரையாடல் நடந்த இடத்திற்கு அருகாமையில் இருந்த மலையில் ஆராதிப்பது சரியா? அல்லது எருசலேமில் ஆராதிப்பது சரியா? என்பதே கேள்வி.

சமாரியர்கள் பழைய பிரமாணத்தில், ஆகமங்கள் என அழைக்கப்படுகின்ற முதல் 5 புத்தகங்களை ஏற்றுக் கொண்டு நடப்பவர்கள். இந்த மலை என்று சொன்ன இடம், சமாரியர்களுக்கு முக்கியமான, மத உணர்வுகளோடு சம்மந்தப்பட்ட இடம். அந்த மலையின் பெயர் கெர்சீம் என்பதாகும். இந்த மலையைக் குறித்து சமாரியர்களுக்குப் பெருமையும், பெருமதிப்பும் இருந்தது. அந்த பெருமைக்கு அவர்களுக்குக் காரணமும் இருந்தது. (1) ஆதாம் இந்த மலையின் மண்ணினால் தான் உண்டாக்கப்பட்டான் என நம்பினர் (2) நோவா காலத்து ஜலப்பிரளயம் இந்த மலையை மூடவில்லை என விசுவாசித்தனர். (3) யாக்கோபு தேவ தூதனோடு போராடியதும் இந்த மலையில் தான் என நம்பினர். (4) இந்த மலையில் உள்ள ஆலயத்தில் தான் ரெகேமியா காலந் தொட்டு அவருடைய முன்னோர்கள் தொழுது வந்தனர். இந்த மலையை விடுத்து வேறொரு இடத்தில் ஆராதிப்பதென்பது அவர்களுக்கு ஏற்றுக் கொள்ள முடியாத காரியம்.

எந்த இடத்தில் ஆராதிப்பது என்பதே இப்பொழுது கேள்வி எருசலேமில் உள்ள ஆலயமோ தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டது. (1 ஏசா 9:3). சமாரியா ஸ்தீரியின் கேள்வியில் பாரம்பரியம் இருந்தது. உண்மையோ இல்லை. ஆனால் கேள்வி அவளுடைய உணர்வுகளோடு சம்பந்தப்பட்டது. எருசலேமில் என்பது தான் அப்பொழுது பொருத்தமான பதில். ஆனால் அவருடைய மத நம்பிக்கையின் உணர்வுகள் புண்படக்கூடாது என கிறிஸ்துவானவர் விரும்பினார். அதே சமயம், அவளுடைய கேள்வியையும் தவிர்க்க விரும்பாமல் மிக விரைவில் நடைமுறைக்கு வரப்போகிற ஒரு ஆராதனையை அங்கே வெளிப்படுத்துகிறார். அந்த ஆராதனை தான் **ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கும் ஆராதனை** (யோவா 4:23,24).

தேவன் ஆவியாயிருக்கிறார். ஆகவே ஆவிக்குரிய தன்மையுடையவர்கள் மட்டுமே அவரை ஆராதிக்க முடியும். 'ஆவியோடும், உண்மையோடும்' அவரைத் தொழுது கொள்ள வேண்டுமென்பது மூன்று முக்கிய காரியங்களை நமக்கு எடுத்துச் சொல்கிறது.

(1) நாம், தேவனை ஆராதிக்க வேண்டும். தேவன் துதிகளுக்குப் பாத்திரமானவர். ஆகவே அவருடைய பிள்ளைகள் அவரைச் ஆராதிக்க வேண்டும்.

(2) தேவனை ஆவியோடு ஆராதிக்க வேண்டும். ஆவி-யோடு என்பது நியாயமான, நேர்மையான மனநிலை குறிக்கிறது. நன்றியறிதலோடு கூடிய உணர்வுகள் இருதயத்திலிருந்து புறப்பட வேண்டுமென்பதே அதன் பொருள்.

ஆனால் ஆவி என்பதற்கு இன்று தவறான அர்த்தம் கற்பிக்கப்படுகிறது. ஆராதனை நேரத்தில் தேவையில்லாத விநோதமான சத்தங்களை எழுப்பி, ஆராதனையின் மாண்பைக் குறைப்பது ஆவி எனச் சொல்லப்படுகிறது. ஆவி என்பது சத்தமானால் தேவன் எப்படி ஆவியாயிருக்க முடியும்.

(3) தேவனை உண்மையாக ஆராதிக்க வேண்டும். இங்கு உண்மை என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் Truth என்று சொல்லப்படுகிறது. Truth என்ற ஆங்கில வார்த்தை யோவான் 17:17-ல் சத்தியம் என்றும், சத்தியம் தேவனுடைய வார்த்தையாகிய வசனம் என்றும் விளக்கப்பட்டிருக்கிறது.

ஆக உண்மையோடு ஆராதிப்பதென்பது தேவனுடைய வசனம் வெளிப்படுத்தியுள்ளபடி ஆராதிப்பதே. வசனம் பூரணமானது. வசனம் முதலாம் நூற்றாண்டில் இருந்தவர்களுக்கும் நமக்கும் ஒரே விதமாகவே உள்ளது. அப்படியானால் முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் தேவனை எப்படி ஆராதித்தார்களென்று வசனம் சொல்கிறதோ, அதே வண்ணம் தான் நாமும் ஆராதிக்க வேண்டும். அந்த ஆராதன்னமுறை, ஒழுங்கு இவைகளிலிருந்து, இம்மியளவு தவறு நேர்ந்தாலும் அது உண்மையான ஆராதனையாக இருக்க முடியாது.

புதிய ஏற்பாட்டு ஆதித் திருச்சபைகள் ஏற்றுக் கொள்ளாத எந்த வழிபாட்டு முறைகளையும் நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஆதித் திருச்சபையில் (முதலாம் நூற்றாண்டில்) காணப்பட்ட ஆராதனை அம்சங்கள் :

| | | |
|---|---|---|
| பாட்டுப்பாடுதல் | : | எபே 5:19, கொலோ 3:16 |
| கிறிஸ்தவ ஈகை | : | I கொரி 16:1,2, II கொரி 9:7 |
| பிரசங்கம் | : | அப் 20:7 |
| கர்த்தருடைய பந்தி | : | அப் 20:7, அப் 2:42 |
| ஜெபம் | : | அப் 2:42 |

இந்த வேதாகம ஒழுங்கின்படி நாம் தேவனை ஆராதித்து ஆசீர்வாதம் பெறுவோம்.

E.Z.S. ராஜநாயகம்

# உலகின் சகல பகுதிகளுக்கும் சத்தியம் ஒன்றே !

அமெரிக்காவில் போதிக்கப்படும் நற்செய்தியானது இந்தியாவிலோ, இந்தோனேஷியாவிலோ அல்லது உலகின் பிற பகுதிகளிலோ, குறிப்பாக பிராந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படும்போது சரியாக பயனளிக்காது என சில வேலைகளில் கூறப்படுகின்றது. உண்மை தான்; மொழியாக்கத்தை விடுத்து தங்கள் சொந்த மொழிகளிலே போதிப்பதும், எழுதுவதும் ஒரு குறிப்பிட்ட பிராந்திய மக்களுக்கு மிகவும் பயன்தரக் கூடியதாக இருக்கலாம். ஆனால் சத்தியம் உலகின் எந்த இடத்தில் போதிக்கப்பட்டாலும் அது சத்தியமாகவே இருக்கும் என்பது தான் உண்மை, ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களுக்காக, அவர்களுடைய சொந்த மொழியில் மொழியாக்கம் செய்யப்படுவது, நற்செய்தியை எளிதிலும் முற்றிலுமாகவும் புரிந்து கொள்ள வழி செய்கிறது. இது உண்மையல்லவென்றால், சில இடங்களில் சுவிசேஷமே அர்த்தமற்றதாகப் போய்விடும்; பிற மொழிகளில் சுவிசேஷத்தை மொழியாக்கம் செய்வதும் வீண் வேலையாக இருந்திருக்கும். பிற மொழிகளில் பேசும் மக்களுடன் பயனுள்ள விதத்தில் தொடர்பு கொள்ள மொழியாக்கம் தேவையற்றது என்றால், அரசியல்வாதிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும் வேலை இருக்காது.

மதத்தை எடுத்துக் கொண்டால், போதனைகள் யாவும், சம்பந்தப்பட்ட வட்டாரத்தின் கலாச்சாரத்திற்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும் என்ற நிலைக்காக வக்கலாத்து வாங்குவோர் உண்டு. ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களின் கலாச்சாரத்திற்கு ஏற்றபடி, ஆராதனை வேளைகளில் நாற்காலிகளில் அமர்ந்தோ, தரையில் அமர்ந்தோ, காலணிகளுடனோ, அவையின்றியோ தேவனை தொழுது கொள்ளுவதில் தவறேதுமில்லை. ஆனால் வாத்தியக் கருவிகளை இசைத்து தான் ஆராதனை செய்வோம் எனக் கூறுவது அபத்தமான வாதம். உண்மை என்னவென்றால் உங்கள் பகுதியின் நாகரீகத்திற்கு ஏற்ப ஆராதிக்கும் இடம், மற்றும் பிற காரியங்களில் மாற்றமிருக்கக் கூடும். ஆனால், கர்த்தர் உங்கள் ஆராதனையை ஏற்றுக் கொள்ள வேண்டுமானால், நீங்கள் உலகின் எப்பகுதியில் வசித்தாலும், ஆராதனை முறையில் சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டவை தவிர, அவற்றுடன் வேறுஎதையும் கூட்டவோ குறைக்கவோ, மாற்றவோ கூடாது.

ஒரு கிணற்றில் தண்ணீர் மொள்ள வந்த சமாரியா நாட்டுப் பெண்ணிடம் இயேசு உரையாடுகிறார். அவள் தேடி வந்த தண்ணீரைப் பற்றியும், இயேசு அவளுக்கு அளிக்கவிருந்த ஜீவத்தண்ணீர் பற்றியும் சுவிசேஷத்தில் விவரிக்கப்பட்டிருப்பதைக் காண முடியும்: "அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன். எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுது கொண்டு வந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுது கொள்ள வேண்டும் என்கிறீர்களே என்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளுங் காலம் வருகிறது. நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்" (யோவான் 4:19-24). இப்பெண்ணிடம் இயேசு என்ன கூறிக் கொண்டிருந்தார்? எங்கே தொழுகிறோம் என்பது முக்கியமல்ல; ஆனால் உண்மையோடும் ஆவியோடும் தொழுவது மட்டுமே ஆராதனைக்குத் தேவை என வலியுறுத்தினார். கர்த்தரை ஆராதிக்கும் போது மனதை ஒருநிலைப்படுத்தி, புரிந்து கொண்டு தியானிப்பதே ஆவியுடன் செய்யும் ஆராதனை. கர்த்தரின் விருப்பத்திற்கு இணங்கி, அவருடைய கட்டளைகளின்படியே ஆராதனையை முறையுடன் செய்வது உண்மையுள்ள ஆராதனையாகும். உண்மையும், ஜீவனுமுள்ள ஒரே ஆவியோடும், உண்மையோடும் தொழும் போது தேவனுடைய முழு ஆதரவுடன் உலகினை எப்பகுதியிலும் ஆராதனை செய்ய முடியும்.

"இடத்திற்கேற்ற நெறிமுறைகள்" பற்றி சிலர் போதிக்கின்றனர். அதாவது, சரியானதென்று ஒரு பகுதியில் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு குணம், உலகின் பிற பகுதிகளில் தவறு எனக் கருதப்படுகிறது. நீ எங்கு வசிக்கிறாய், யாரோடு வசிக்கிறாய், எந்த சூழ்நிலையில் வசிக்கிறாய் என்பவற்றைப் பொறுத்து ஒரு காரியம் சரி அல்லது தவறு என நிச்சயிக்கப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். நாம் சொல்லுவது என்னவென்றால், உலகின் எந்தப் பகுதியில் ஒருவர் வசித்தாலும், அங்கெல்லாம் சத்தியம்

சத்தியமாகவே இருக்கும். தன்னிலே தவறான ஒரு செயலை உலகின் எந்த ஒரு இடத்தில் வசிப்பவராவது, எந்த நேரத்திலாவது, எந்த சந்தர்ப்பத்திலாவது செய்தால் அச்செயல் தவறு தான்.

மீண்டுமாக, உலகில் எங்கு நீங்கள் வாழ்ந்து வந்தாலும் அங்கெல்லாம் சத்தியம் சத்தியமாகவே நிலைத்து நிற்கும்.

''உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' என இயேசு கூறினார். (மாற்கு. 16:15 16). இப்பூமியில் எத் திசையில் நீங்கள் வசித்து வந்தாலும், எங்கும் ஒரே ஒரு சபை, அதாவது கர்த்தருடைய சபை மட்டுமே உண்மையானதாக இருக்கிறது (மத். 16:18). தேவனால் மனுக்குலம் முழுவதற்குமாக அளிக்கப்பட்ட ஒரே சட்ட நூலாகிய வேதாகமம் கூறும் ஆராதனை முறை, கிறிஸ்தவ வாழ்க்கை. மரணம், கிறிஸ்துவின் வருகை அல்லது வேறு எந்த ஒரு காரியமும் சத்தியத்தை மட்டுமே போதிக்கின்றன.

சத்தியம், மனிதனுக்கு கர்த்தர் அளித்த கட்டளைகள், நற்செய்தி, கிறிஸ்தவம் இவை யாவற்றிலும் காணப்படும் ஆச்சரியப்படத்தக்க அழகு என்னவென்றால், உலகின் சகல பகுதி மக்களுக்கும், எவ்வித மாறுபாடும் இன்றி இவையெல்லாம் பொருந்துகின்றன. உலகின் ஒரு பகுதியில் இவற்றை ஒருவிதமாகவும், மற்றொரு பகுதியில் வேறுவிதமாகவும் வித்தியாசமான முறையில் செயலாக்கினால் எவ்வளவு குழப்பங்களை நாம் சந்திக்க நேரிடும்! நாம் தெரிந்து கொள்ளவேண்டியது, உலகில் வாழும் சகல மக்களுக்கும் தேவன் ஒருவரே, கர்த்தர் ஒருவரே, ஆவி ஒன்றே, சபை ஒன்றே, வாழ்க்கை நெறிமுறை ஒன்றே, நம்பிக்கையும் ஒன்றே!

நாம் பணிபுரியும் பகுதி மக்களின் மத சம்பந்தமான கருத்துக்களை அறிவது நமக்கு உதவியாக இருக்கக்கூடும் என்பது உண்மையே. ஆனால் வேதாகமம் கூறும் படிப்பினைகள் ஒரு இடத்திற்குப் பொருந்துவது போல, பிற இடங்களிலும் பொருந்தாது என வாதிப்பது, வித்தியாசமான கலாச்சாரங்களைக் கொண்ட சகல மக்களுக்கும், எல்லா காலத்திற்கும் பொருந்தக் கூடிய ஒரே புத்தகத்தை நமக்கு அளித்துள்ள தேவனுடைய ஞானத்திற்கு விடப்படும் சவாலாகும்.

J. C. சோட்

# ஆதிக்கம் செலுத்தும் பெண்

தன் குடும்பத்தை ஆட்டிப்படைக்கும் ஆர்வமுள்ள ஒரு பெண்ணை நான் அறிவேன். அப்பெண்ணின் 'உத்தரவுகளை' அட்சரம் பிசகாமல் அப்படியே கடைபிடிக்கிறான் அவளது கணவன் அவளுடைய பிள்ளைகள் செய்ய விரும்பும் சகல காரியங்களுக்கும் அவளது அனுமதி அவசியம் தேவை. வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனக் கூறு போடும் கூர்மையான நாக்கு, திடீர் கோபம் - இவை அப்பெண்ணின் 'சிறப்புச் சொத்துக்கள்'. தப்பித்தவறி, தற்காலிகமான ஏதிர்ப்பு எதுவும். இக்குடும்ப அங்கத்தினர்களால் ஏற்பட்டு விட்டால் இந்த அம்மையாருக்கு அதை சகித்துக் கொள்ளும் சக்தி கொஞ்சமும் கிடையாது. உடனே 'தலைவலியோ, வேறு ஏதாவது நோயோ வந்துவிடும்! பின்னர் கேட்பானேன்? 'சுகமில்லாத அம்மையாருக்கே இறுதி வெற்றி!

இதில் வேதனைக்குரிய காரியம் என்னவென்றால், தான் செய்வது மட்டுமே சரி என இப்பெண் நினைப்பதுதான். தேவனால் அமைக்கப்பட்ட குடும்ப நலத்திட்டத்திற்கு விரோதமான காரியங்களைத் தான் செய்து வருவது பற்றி இப்பெண் உணருவதே இல்லை இது தவறான செயல் அல்லவா?

''மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்படிகிறதுபோல, உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்படியுங்கள். கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் ......'' என எபேசியர் 5:22,23 வசனங்கள் கூறுகின்றன'

ஒரு பெண் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை தானே ஏற்று நடத்தும் போது தனது குடும்பத்திற்கு அவள் செய்யும் தீங்குகள் யாவை?

ஒரு பெண்ணுக்கு இயற்கை அளித்துள்ள மென்மை, அன்பு, பாசம் ஆகிய நற்குணங்களுக்கு அவள் விடை கொடுத்து விட்டு, அவற்றிற்குப் பதிலாக, உரிமை கொண்டாடல், சகிப்புத்தன்மை இல்லாமை, எப்போதுமே சண்டையிடும் சுபாவம் ஆகியவற்றை அவள் பெற்றுக் கொண்டவளாக மாறுகிறாள். வயது ஏற ஏற இத்தீய குணங்கள் வலுப்பெற்று, அவளை ஒரு 'ராட்சசி' ஆக மாற்றிவிடுகிறது. ஆதிக்கம் செலுத்தும் சில பெண்களை சகித்துக் கொள்வோர் உண்டு. என்றாலும் அவர்களோடு இணைந்திருப்பதில் யாரும் உண்மையில் மகிழ்ச்சி அடைவதில்லை.

அவள் கணவனின் சுயமரியாதையையும், சகல காரியங்களிலும் முடிவு எடுக்கும் அதிகாரத்தையும் அவனுடைய மனைவி பிடுங்கிக் கொள்ளுகிறாள். அவர்களுக்கு திருமணமான புதிதில், கணவன் பேரில் ஒரு நிச்சயமற்றத் தன்மையையும், தனக்குப் பாதுகாப்பற்ற நிலையையும் ஒரு வேளை அவள் உணர்ந்திருக்கக் கூடும். அவன் பேரில் ஆளுகை செலுத்தி, கொஞ்சங் கொஞ்சமாக அவனுடைய தன்மானத்தையே பறித்து, ஒரு நல்ல கணவனாக ஒரு தலைவனாக, எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மனிதனாக அவன் நடமாடுவதை முடக்கிப் போடுகிறாள். தன்னம்பிக்கை இழந்த நிலையில், கணவனை உற்சாகப்படுத்துவதற்குப் பதில், அவனது உத்தியோகத்திலும் அவன் ஈடுபடும் பிறகாரியங்களிலும் முன்னேற முடியாத முட்டுக்கட்டையாக அவள் ஆரம்பித்து விடுகிறாள்.

தனது கணவனுக்கு அவர்களுடைய பிள்ளைகளும் பிறரும் செலுத்தக் கூடிய மரியாதையை அவள் அபகரித்து விடுகிறாள். அவளுடைய ஆளுகை குடும்பத்தில் மேலோங்கி இருப்பதாலும், காலப்போக்கில் அவளுடைய கணவன் அவளுக்குப் பணிந்து போவதாலும், பிள்ளைகள் அவனை அலட்சியமாகப் பார்க்கிறார்கள். அவர்களை நல்வழிப்படுத்தவோ, வழிகாட்டவோ அவன் முயன்றால், அவனுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக, அவனை ஏளனம் செய்கின்றனர்.

தனது பிள்ளைகளின் குடும்ப வாழ்க்கையிலும், குடும்ப உறவிலும் சரியான கண்ணோட்டமின்றி அவர்களைக் கெடுத்துப் போடுகிறாள், அப்பெண். எனவே, அவருடைய ஆண் பிள்ளைகள் வளர்ந்த பின் தங்களுடைய தந்தையை முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, ஒரு நல்ல கணவனாகவோ அல்லது தந்தையாகவோ அவர்கள் வாழ முடியாமல் போகிறது. ஏனெனில், ஆளுகை செலுத்தும் ஒரு தாயால் அவதிப்படும் தங்கள் தந்தையிடமிருந்து கற்றுக் கொள்ள எதுவுமே இல்லாமல் போய் விடுகிறது. பொதுவாக, அப்பிள்ளைகள் ஒன்றில் தங்கள் தகப்பனைப் போல 'அடிமைகளாக' மாறுகின்றனர். அல்லது தாயைப்போல அரக்கத் தனத்தில் தங்கள் மனைவி, மக்களை நடத்த முயலுகின்றனர்.

குடும்பத்தில் ஆளுகை செலுத்தும் இப்படிப்பட்ட பெண்களின், பெண் குழந்தைகளுக்கும் பிரச்சனைகள் வருகின்றன. தங்களுடைய தந்தையை அடக்கி ஆண்டு வந்த தாயை பல வருடங்களாகப் பார்த்து வந்த காரணத்தால், தாயின் வழியிலே

சென்று தங்களுடைய கணவன்மாரையும் அடக்கி ஆள நினைக்-கின்றனர். ஆனால், அக் கணவர்களோ அப்படிப்பட்ட அடக்கு முறையை ஏற்க மறுத்து விடக்கூடும். விளைவாக, வாழ்க்கை முழுவதும், ''இந்த வீட்டிற்கு யார் அதிகாரி?'' என்ற கேள்வி-யால் அடிக்கடி சண்டையும் சச்சரவும் ஏற்படுகிறது. அங்கு ஒரு 'நரகம்' உருவாக்கப்படுகிறது.

குடும்பத்தில் ஒழுங்கை ஏற்படுத்திய தேவனுக்கு, அவர் செய்வது சரியான காரியம் என்பது தெரியாதா?

தன்னம்பிக்கையில் நிறைவு பெற்று, குடும்பத்தை தலைமை தாங்கி நடத்திச் செல்லும் திறமை பெற்ற ஒரு கணவனை மனைவியும் மதித்து நடந்து, அவனுடைய பிள்ளைகளும் அவனை நேசித்து, மரியாதை செலுத்தும் போது, அவன் ஒரு மகிழ்ச்சியான மனிதனாக வாழ்கிறான். ஒரு பெண் தனது கணவனின் அன்பையும் அக்கரையையும் அடைந்து, பிள்ளைகளின் பேரன்பையும் மரியா-தையையும் பெறும் போது அவளும் அவளைச் சுற்றியுள்ள யாவரும் மகிழ்ச்சி அடைகின்றனர். தந்தையின் ஆதரவில் பாதுகாப்பு உணர்வையும், தாயின் அன்பும் பயிற்சியும் பிள்ளைகளின் நிலையான சொந்த வாழ்வை அமைக்கப் பெரிதும் உதவுகிறது.

தேவன் அமைத்த குடும்ப நலத்திட்டத்திற்கும் மேலான ஒன்றை 'எல்லாம் தெரிந்த' நாம் அமைப்பதாக நினைத்துக் கொண்டு தவறு செய்யும் மக்களின் பரிதாப நிலையை என்னவென்று சொல்ல? தேவனுடைய சரியான திட்டத்திற்கு மாறாக செயல்பட்டால் நமக்குத் தான் நஷ்டம் மறந்து விட வேண்டாம்.

**பெட்டி பர்ட்டன் சோட்** **ரேச்சல் ராஜநாயகம்**

## அறிவுரை

''ஆதலால் கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகின்ற புத்தி என்னவென்றால், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்-வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். (எபே 4-1,3).

# "பாஸ்டர்" என்றால் யார்?

புதிய ஏற்பாட்டில் 'பாஸ்டர்' என்ற சொல் யாரைக் குறிப்பிடுகிறது என்பதை நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா?

* 'பாஸ்டர்' என்ற சொல்லை புதிய ஏற்பாட்டில் **ஒரே ஒரு முறை மட்டுமே** காணமுடிகிறது. ''அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கத்தரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை **மேய்ப்பராகவும்** போதகராகவும் ஏற்படுத்தினார்''. (எபே 4:13). பாஸ்டர் என்றால் மேய்ப்பர் எனப் பொருள்.

* 'பாஸ்டர்' என்றால் ''போதகர்'' என்று அர்த்தமல்ல. இன்று எல்லா போதகர்களையும் பலர் பாஸ்டர் என்றே அழைக்கின்றனர். ஆனால் பாஸ்டர் என்றால் போதகர் என புதிய ஏற்பாடு எந்த இடத்திலும் கூறவில்லை, ஒரு பிராந்திய சபையின் பாஸ்டர்களில் **ஒருவராக** ஒரு போதகர் சில வேளைகளில் நியமிக்கப்படக்கூடும். ஆனால் நற்செய்தி போதகர்களில் பலரும் போதகர்கள் தான். எல்லா பாஸ்டர்களும் போதகர்களும் அல்ல; எல்லா போதகர்களும் பாஸ்டர்களும் அல்ல.

* பாஸ்டர் என்றால் 'மேய்ப்பன்' எனப் பொருள். 1611ம் ஆண்டு ஆங்கிலத்தில் வேதாகமம் மொழியாக்கம் செய்யப்பட்ட வேளையில் (K.J.V), ஆடுகளை மேய்ப்பவனை சாதாரணமாக பாஸ்டர் என்று அழைத்தனர், இயேசு 'பிரதான மேய்ப்பர்' (1 பேதுரு 5:5) என அழைக்கப்பட்டார். அதே வார்த்தையை 'பிரதான பாஸ்டர்' என ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்திருந்தாலும் அது சரியாகவே இருந்திருக்கும்.

* பிராந்திய சபையின் ''மூப்பர்கள்'', ''பிஷப்புகள்'' ஆகப் பணியாற்றும் அதே **சகோதரர்கள்** தான் ''பாஸ்டர்கள்'' ஆவர். இவர்களை பல சமயங்களில் மூப்பர்கள் என்றும், பிஷப்புகள் (கண்காணிகள்) என்றும், பாஸ்டர் (மேய்ப்பர்) என்றும் அழைக்கிறோம். 1 பேதுரு 5;1-2 ; அப் 20: 17,28 வசனங்கள் யாவும், மேற்சொன்ன எல்லா பெயர்களும் ஒரே பணியைச் செய்பவர்களையே குறிப்பதாகக் கூறுகின்றன, ''உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து ...... கண்காணிப்புச் செய்யுங்கள்'' என ''மூப்பர்களுக்கு' பேதுரு கூறுவதைப் பார்க்கிறோம்

(1 பேதுரு 5: 1-3). இந்த வசனங்களிலே, **மூப்பர்கள்** மந்தையை மேய்க்கவும் (பாஸ்டர்), சபையைக் கண்காணிக்கவும் (பிஷப்) கூறப்படுகின்றனர்.

''எபேசு சபையின் மூப்பர்களிடம்'' பவுல் கூறும்போது, 'ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்'' (அப் 20:17,28) என்றார். எனவே, சபை மூப்பர்களை பவுல் பிஷப் (கண்காணிகள்) என்றும் மந்தையை அவர்கள் கண்காணிக்க (பாஸ்டர்) வேண்டும் என்றும் கூறுகிறார்.

புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ள ஒரு பிராந்திய சபைக்கு **ஒரு போதும் ஒரே ஒரு பாஸ்டர் மட்டும்** இருப்பதில்லை. ஒரு பிராந்திய சபையின் மூப்பர்கள் என புதிய ஏற்பாடு குறிப்பிடும் ஒவ்வொரு வேளையிலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூட்டாக செயல்பட்டதாகவே காணமுடியும் (அப் 11;30 14:23; 15:4; 20:17; தீத்து 1:5; யாக் 5:14 ; பிலி 1:1).

ஒரு பிராந்திய சபையின் பாஸ்டர்களில் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு முன் **பல சிறப்பு தகுதிகளை** ஒரு பாஸ்டர் பெற்றவராக இருக்கவேண்டும் (தீத்து 1:5–9; 1 தீமோ 3:1-7) பிற தகுதிகளோடு கூட ஒரு **பாஸ்டர்** திருமணமாகி ஒரு மனைவி குழந்தைகளுடன் வாழ்பவராகவும், வயது முதிர்ந்தவராகவும் (மூப்பர்), சபையின் புதிய அங்கத்தினரல்லாதவராகவும் இருக்க வேண்டும். ஒரு **போதகருக்கு** இத்தகுதிகள் தேவையல்ல. (பார்க்க: அப் 8:4; 9: 18-20).

பிராந்திய சபையில் முடிவுகள் எடுக்கும் **அதிகாரம் பாஸ்டர்களுக்கு** உண்டு. இப்படிப்பட்ட அதிகாரங்கள் போதகர்களுக்கோ, சபை உறுப்பினர்களுக்கோ கிடையாது (எபி 13:17 1 தீமோ 5:17,19; 1 தெசெ 5:12,13). புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்டுள்ள கட்டளைகளை மாற்றவோ, அல்லது அவற்றிற்குக் கீழ்படிய மறுக்கும் அதிகாரமோ பாஸ்டர்களுக்குக் கிடையாது (பார்க்க: 1 தீமோ 5:19-21! தீத்து 1:9; யூதா 3). ஆனால் பிராந்திய சபையின் பணிகளை கண்காணிப்பதில் முடிவெடுக்கும் அதிகாரமும் கடமையும் அவர்களுக்கு உண்டு.

மேய்ப்பர்கள் எவ்வாறு ஆடுகளை மேய்க்கின்றனரோ அவ்வாறே **பாஸ்டர்கள்** (மேய்ப்பர்கள்) **மந்தையை மேய்க்க**

**வேண்டும்.** பிராந்திய சபையின் போதகர்களும் பிற உறுப்பினர்கள் யாவரும், சக உறுப்பினர்களின் பேரில் அக்கரை கொண்டு அவர்களுக்கு உதவ வேண்டும் (கலா 6:1-2; 1 கொரி 12:25-26; யாக் 5:19-10). என்றாலும் சபையில் பாஸ்டர்கள் இருப்பார்களேயானால், **மந்தையை மேய்க்கும் முதல் பணி** பாஸ்டர்களையே (பிஷப், மூப்பர்) சாரும் (அப் 20:28; 1 பேதுரு 5:2). இவர்கள் கூட்டாக மேய்ப்பர்களாக செயல்பட்டு அங்கத்தினர்களுக்கு ஆவிக்குரிய ஆகாரமாகிய தேவனுடைய வசனத்தை ஊட்டி இக்கட்டான வேளைகளில் அவர்களுக்கு உதவி, தவறிப் போகும் அங்கத்தினர்களை மீண்டுமாக மந்தையில் சேர்க்கும் பணியில் ஈடுபடவேண்டும். மந்தைக்குக் கேடு விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக செயல்பட்டு, கள்ளப் போதகர்களை இனங்கண்டு அவர்களை அகற்றுவதும் மேய்ப்பர்களுடைய பணி (அப் 20 : 29 - 31; தீத்து 1:9-11)

மந்தையை மேய்க்கும் ஆரம்ப பணிகளை ஒரு **போதகர்** செய்ய வேண்டும் என சில **உறுப்பினர்கள்** எதிர்பார்க்கின்றனர். பிரச்சனைகள் உருவாகும்போது அவற்றைத் தீர்த்து வைக்க மூப்பர்களை நாடாமல், ஒரு போதகரையே பலர் அழைக்கின்றனர். (பார்க்க யாக் 5:14). மனிதர்கள் உருவாக்கிய நாமகரண சபைகளைப் போல, பிராந்திய சபையை ஒருவரே வழி நடத்திச்செல்ல வேண்டும் என சில உறுப்பினர்கள் விரும்புகின்றனர். கர்த்தரின் சபை ஆளுகை அமைப்பிற்கு இது விரோதமானது "சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிப்பதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும்" என சாமுவேலிடம் கூறிய இஸ்ரவேலர்களைப் போல இந்த அங்கத்தினர்கள் செயல்படுகின்றனர். (1 சாமு 8:5). கர்த்தரின் வழியை தள்ளிப் போடுவதின் மூலம் கர்த்தரையே தள்ளிப்போட்டு (8:7) பெரிய பொல்லாப்பைச் செய்கிறார்கள். (12:17)

மந்தையை மேய்க்கும் பெரும் கடின பணியை சில **பாஸ்டர்கள்** புறக்கணிக்கின்றனர். அவர்களுக்கு **பதிலாக ஒரு போதகர்** அப்பணியைச் செய்ய வேண்டுமென சில சமயங்களில் எதிர்பார்க்கின்றனர். பிராந்திய சபையிலுள்ள கடின பணிகளால் சில பாஸ்டர்கள் ஆயாசமடைந்து, ஊக்கமிழந்து போவதாலேயே தமது பணியைச் செய்ய பிறரை எதிர்பார்க்கும் நிலை ஏற்படுகிறது. போதிப்பது, பலவீனமான உறுப்பினர்களைப் பலப்படுத்துவது போன்ற பணிகளில் தங்களுக்கு உதவியாக செயல்பட போதகர்களையும், விசுவாசமிக்க உறுப்பினர்களையும் **பாஸ்டர்கள்** சேர்த்துக் கொள்ளலாமே! அத்தோடு அவர்களுடைய பணிகளில்

செலவற்றைச் செய்ய உதவிக்காரர்களையும் நியமித்துக் கொள்ளலாம். (பார்க்க பிலி 1:1, அப் 6: 1-6) உதவிக்காரர்களின் தகுதிகள் பற்றி 1 தீமோத்தேயு 3: 8-13 வசனங்களில் காணலாம். ஆனால், மந்தையை மேய்க்கும் பணியை பாஸ்டர்கள் ஒரு போதும் அலட்சியப்படுத்தக் கூடாது.

சில போதகர்கள் தாங்களே மந்தையை மேய்க்கும் பணியை ஏற்றுக் கொள்ளுகின்றனர். எல்லா உறுப்பினர்களையும் உண்மையிலேயே நேசிக்கும் ஒரு போதகர், தான் பாஸ்டர்களில் ஒருவர் அல்ல என்பதை சில சமயங்களில் மறந்து போகக் கூடும். போதிப்பதே தனது பணி என்பதையும், பாஸ்டர்களை அவர்களுடைய பணிகளைச் செய்ய உற்சாகப்படுத்த வேண்டும் என்பதையும் மறந்து விடக்கூடும். மந்தையை மேய்க்கும் பணியை பாஸ்டர்கள் செய்வதை தடுத்து, காலப்போக்கிலே மேய்க்கும் பணியை போதகர் எடுத்துக் கொள்ளக்கூடும். மந்தையை மேய்க்கும் பணியையும் சபையை நடத்திச் செல்லும் பணியையும் சில போதகர்கள் விரும்புகின்றனர். இப்பணிகளில் தங்களை பலவந்தமாக ஈடுபடுத்திக் கொண்டு தங்களுக்கென பல சீடர்களை ஈர்த்துக் கொள்ளும் போதகர்களும் உண்டு, இந்நிலையின் விளைவாக போதகர், பாஸ்டர்களையே (மூப்பர்கள்) எதிர்க்கவும் கூடும்; பின் சபையை பிளந்து, இரு கூராக்கி ஒரு பகுதியை தன்னோடு சேர்த்துக் கொள்ளவும் கூடும். (அப். 20:29–30).

எல்லாவற்றிலும் சிறந்தது கர்த்தருடைய வழி மட்டுமே! அவருடைய சபையாக இயங்க, புதிய ஏற்பாட்டு வசனங்களை பேசுவதிலும், நடைமுறையிலும்-கர்த்தர் எவ்வாறு நடந்து கொண்டாரோ அவ்வாறே நாமும் நடக்க வேண்டும். [2 தீமோ 1;13, 2:3; மத் 28:20] தகுதி. வாய்ந்த பாஸ்டர்களை (மேய்ப்பர், பிஷப்) தேர்ந்தெடுத்து, அவர்களை நியமிக்க வேண்டுமென்று அவருடைய வசனங்கள் மூலமாக கர்த்தர் நமக்குக் கட்டளையிடுகிறார். [அப், 14;23: தீத்து 1;5], தாழ்ச்சியுடனும், விசுவாசத்துடனும் தங்களுடைய பணிகளை அவர்கள் செய்ய வேண்டும் [1பேதுரு 5:1-5 அவர்களுடைய பணி உற்சாகமாகவும் சிறப்பாகவும் நடைபெற சபை உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். மேய்ப்பர்களுக்கு உறுப்பினர்கள் கீழ்ப்படியும் போது இவ்வித ஒத்துழைப்பைக் கொடுக்க முடியும். [எபி, 1317]. "அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவு அன்பாய் எண்ணிக் கொள்ளும்படி உங்களை வேண்டிக் கொள்ம் கிறோம். "[1தெசெ 5:13;பார்க்க 1 தீமோ 5:17)

Royce Frederick எஸ். எஸ் ராஜன்

# இச்சை

## (LUST)

பிரச்சனைகள் நிறைந்த ஒரு உலகில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். யுத்தங்களும் வன்செயல்களும் பரவலாகக் காணப்படுகின்றன. மீண்டும் ஒரு உலக யுத்தம் வந்துவிடுமோ என இவ்வுலகை பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. உடலுக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற ஒரு நிலையை மக்கள் உணருகின்றனர். எதுவும் நடக்கக்கூடும்! வேலையில்லா திண்டாட்டம் தினமும் பெருகிக் கொண்டே போகிறது. மனிதனுடைய தேவைகளும் அதிகப்பட்டுக் கொண்டே போகின்றன. பண வீக்கத்தாலும் விலையேற்றத்தினாலும் தன்னுடைய தேவைகளைச் சந்திக்க சக்தியற்று மனிதன் சஞ்சலப்படுகிறான். விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் மனிதன் மேம்பாடடைந்துகொண்டு வருவது உண்மை என்ற போதிலும், ஒழுக்கத்தில் அவன் கீழ்நோக்கி படு வேகமாகச் சென்று கொண்டிருப்பதும் மறுக்கமுடியாத மற்றொரு உண்மையாகும். குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன ஆட்களைக் கடத்துதல், கொள்ளையடித்தல், திருட்டுக்கள், ஏமாற்றுதல், கொலைகள் போன்ற கொடூரமான குற்றங்கள் தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மனிதனுடைய உண்மையான பிரச்சனை தான் என்ன என்பது பற்றி நீங்கள் எப்போதாவது சிந்திக்க முயற்சித்ததுண்டா? அதற்கு அவன் செய்யும் **பாவம்** தான் காரணமாக இருக்கிறது; ஆம், மனிதனுடைய எல்லா பிரச்சனைகளுக்கும் ஆணி வேராக அமைந்திருப்பது பாவமே. தேவனுடைய கட்டளைகளின்படி நடக்காத காரணத்தால் மனிதன் பாவியாக இருக்கிறான். உலக முழுவதும் பாவம் நிறைந்துள்ளது. இவ்வுலகில் மனிதன் எங்கெல்லாம் வாழுகிறானோ, அங்கெல்லாம் பாவமும் அவனோடு இணைந்து கொள்கிறது. அதைக் கண்டுபிடிக்க அதிக தூரம் பயணம் எதுவும் தேவையில்லை. நமது நாட்டிலேயே அதைக் காணமுடியும்: நமது சொந்த நகரத்திலோ அல்லது கிராமத்திலோ காணலாம். நமது தெருவிலே, நமது வீட்டிலே, நமது சொந்தக் குடும்பங்களிலே ஏன், நமது சொந்த வாழ்விலேகூட அதைக் காணமுடியும். தேவனுடைய கட்டளைகளுக்கு மாறானவை யாவும் பாவமே. ஆனால் மனிதன் ஏன் பாவம் செய்கிறான்?

பாவத்தின் முக்கிய காரணம் இச்சை. "அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்-

படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும்'' பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும், என்பதாக தேவனுடைய புத்தகமாகிய பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. [யாக்கோபு 1;14,15]

ஒரு குறிப்பிட்ட பொருளை மனிதன் கண்டு, அதை அடைய-வேண்டுமென்ற ஆசையை தன் உள்ளத்தில் வளர்த்துக் கொள்ளும் போது, அப்பொருள் அவனுக்கு அளிக்கவிருக்கும் குறுகிய கால இன்பத்தைப் பற்றிய சிந்தனை மட்டும் அவன் மனதில் நிற்கிறது. அச் செயலால் அடையப் போகும் தீங்கான பின் விளைவுகளைப் பற்றி அவன் சிறிதும் சிந்திப்பதில்லை. வேதாகம எழுத்தாளர்களில் ஒருவர் எச்சரிப்பதைக் கவனியுங்கள்.'' மதுபானம் இரத்த வருண-மாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும் போது, நீ அதை பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப் போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும்'' (நீதி 24: 31, 32). ஒவ்வொரு பாவத்திற்கும் இந்த விதி பொருந்தும். மனிதனுடைய இருதயத்தில் அல்லது மனதில் இருந்தே ஒவ்வொரு பாவமும் புறப்படுகிறது. மனிதன் ஒரு பாவத்தை செய்யும் முன், இச்சை அல்லது ஆசை அவனுடைய இருதயத்தில் பிறக்கிறது. பின்னர், அவனுடைய இதய தாகத்தைத் தணிக்கும் வகையில் தனது இச்சையில் ஊக்கமடைந்து பாவத்தைச் செய்கிறான். பின் விளைவுகளை சிந்தித்துப் பார்க்கும் நிலையில் அவன் அப்போது இருப்பதில்லை. பாவத்தின் விளைவு பயங்கரமானது. பாவத்தின் விளைவு மரணம்!

மனிதனின் மரணத்தின் போது, அவனுடைய ஆத்துமா அல்லது ஆவி எப்படி அவனுடைய உடலை விட்டுப் பிரிந்து செல்கிறதோ, அதே போல மரணம் என்ற வார்த்தை பிரிவு அல்லது உறவின் முறிவு என பொருள்படும். தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு முறிந்து போகும் வேலையிலும் மனிதன் ஆவியில் மரணமடைகிறான், ஒருவனும் பாவியாகப் பிறப்பதுமில்லை, அல்லது பாவத்தை பெற்றோர்களிடமிருந்து சுமந்து வருவதும் இல்லை. ஏனெனில், மனிதனை உண்டாக்கிய தேவன், ஆதியில் அவனை பாவியாக உண்டாக்கவில்லை, அவனை களங்கமற்றவ-னாகவும் பரிசுத்தவானாகவும் உண்டாக்கினார். வேதாகமம் கூறுகிறது: ''தேவன் தம்முடைய சாயலாகமனிதனை சிருஷ்டித்தார்; அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்'' (ஆதி 1:27). ஆனால் தனது இச்-சையால் கவரப்பட்ட மனிதன் சோதனையில் வீழ்ந்து பாவம் செய்கிறான். இப்படியாகத்தான் மனிதன் பாவியாகிறான்; அதன் விளைவாக தேவனிடமிருந்து பிரிந்து அவருடன் இணக்கமற்ற

நிலையில் இருக்கிறான். ஏனெனில், ''எல்லாரும் பாவஞ் செய்து ..'' என வேதாகமம் தெரிவிக்கிறது. (ரோமர் 3:23).

என்றபோதிலும், மனிதனை தேவன் உண்டாக்கியபடியாலும் அவனை அவர் நேசிக்கிறபடியாலும், பாவத்தின் பயங்கர விளைவுகளிலிருந்து எல்லாரையும் இரட்சிக்க அவர் விரும்புகிறார். ஆவியின் மரணத்தால் அவரிடமிருந்து விலகி எவரும் வாழ்வதை அவர் விரும்பவில்லை. எனவே தேவனுடன் மீண்டுமாக ஒப்புரவாகி ஆவிக்குரிய வாழ்க்கையை தொடர வேண்டி அதற்காக ஒரு வழியை வைத்துள்ளார், மனிதனை பாவத்திலிருந்து மீட்டு, அவனை இரட்சிக்க தேவனே மனித அவதாரம் எடுத்து மனிதனோடு இவ்வுலகில் வாழ்ந்தார். இந்த மனிதனே இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன் 33 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார் என்றும் ஒருபோதும் அவர் பாவம் செய்யவில்லை என்றும் வேதாகமம் கூறுகிறது. மேலுமாக, ''...... எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியாரே நமக்கிருக்கிறார்'' என இயேசு கிறிஸ்துவைப் பற்றி தேவனுடைய புத்தகமாகிய வேதாகமம் கூறுகிறது (எபி 4:15) பின்னர், அவருடை வல்லமையான அற்புத அடையளங்களாலும், மரித்தபின் உயிர்த்தெழுந்தாலும், கிறிஸ்து உண்மையிலேயே தேவனுடைய குமாரன் என்பதை நிரூத்பிதுக் காட்டினார். ஆனால், பாவத்திலிருந்து மனிதனை மீட்க அவர் என்ன செய்தார்?

யாரோடும் போர் புரிய அவர் சொல்லவில்லை. அவருடைய எதிரிகளிடம் கூட அவர் ஒரு போதும் சண்டையிட்டதில்லை. பாவிகளை அவர் ஒருபோதும் திட்டியதில்லை; கண்டித்ததில்லை. மாறாக, அவர்களை அவர் நேசித்தார்; அவர்களை இரட்சிப்பின் வழியில் திருப்பினார். இவ்வுலகில் தனது சொந்த உயிரைக் கொடுத்து மனிதனை பாவத்திலிருந்து விடுவித்தார். உலகின் எல்லா மக்களின் சகல மாவங்களையும் அவரே சுமந்தார். மக்களுடைய பாவங்களுக்குப் பரிகாரமாக சிலுவையில் அவரே பலியானார். ''நாம் பாவிகளாக இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார்'' என சுவிசேஷத்தில் கூறப்படுகிறது (ரோமர் 5:8) தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராக கிறிஸ்து செயல்படுபவராக வேதாகமம் தெரிவிக்கிறது. அவரிம் விசுவாசம் வைத்து, அவருடைய கட்டளைகளைக் கடைபிடித்தால், அவர் வழியாக தேவனிடம் திரும்ப முடியும். ''நானே வழி, சத்தியம் ஜீவன்; என் வழியாலன்றி என் பிதா (தேவன்) விடத்தில் ஒருவனும் வர இயலாது'' என இயேசு கூறியிருக்கிறார் (யோவான் 14:6).

நாம் ஏற்கனவே தெரிந்து கொண்டதுபோல, இயேசுகிறிஸ்து சகல காரியங்களிலும் நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார்; என்றாலும் அவர் பாவமற்றிருந்தார். எந்த மனிதனும் இவ்வாறு இருக்க இயலாது, ஆனால் இயேசு பாவம் செய்யவில்லை; ஏனெனில் அவர் தேவன். இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அவர் வாழ்க்கையைப் பின்பற்றி நடப்போமானால் பாவத்திலிருந்து விலகி வாழமுடியும். ஏனெனில், நாம் கிறிஸ்துவுக்குள் வாழும்போது மாமிச இச்சையின்படி நடக்கமாட்டோம்; கிறிஸ்துவால் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் பாதுகாப்போடு பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வோம். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, பரலோகத்தில் நித்திய வாழ்வை அடைய நீங்கள் கிறிஸ்துவுக்குள் வரத் தயாரா?

**சன்னி டேவிட்**

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

* கர்த்தருடைய கட்டளைக்கு மாறான காரியங்களுக்காக ஜெபித்தால் பலன் கிடைக்காது. **''நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்** *(1 யோவான் 5:14).*

* ''மனிதனுடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்'' (மத்தேயு 6:14,15)

**ஜெர்ரி பார்பர்**

# தேவனோடு எப்போதுமே நீடித்து வாழ்வது எப்படி ?

நாம் எல்லோருமே பாவிகள். தேவனுடைய சட்டங்களை மனிதன் மீறும் போது "பாவம்" செய்கிறான். 1 (யோவான் 3:4). இயேசுவைத் தவிர, வேறு எந்த ஒரு மனிதனும் முற்றிலுமாக பாவமற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்ததில்லை. ஏனெனில், "எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி" மாறிப் போனதாக ரோமர் 3:23ம் வசனம் கூறுகிறது.

தேவன் முற்றிலுமாக பரிசுத்தமானவர், எனவே பாவிகளோடு அவர் உறவு வைத்துக் கொள்ள முடியாது." உங்கள் அக்கிரமங்களே (பாவங்கள்) உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது.("ஏசயா 59:2). "பாவத்தின் சம்பளம் மரணம்" [ரோமர் 6:23; எசேக் 13:20] "மரணம்" என்றால் "பிரிவு" எனப் பொருள். நமது சரீரத்திலிருந்து ஆவியானது பிரிந்து செல்லும் போது சரீரமரணம் ஏற்படுகிறது. [யாக்கோபு 2:26].தேவனிடத்திலிருந்து நமது ஆவி பிரியும்போது ஆவியில் மரணம் ஏற்படுகிறது. (எபே 2:1,5; 4:18, 1 தீமோ 5:6]. பாவத்தில் நாம் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் வரை, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளோம். நமது இரட்சிப்புக்கு அளிக்கப்பட்டுள்ள சகல சந்தர்ப்பங்களும் நமது சரீர மரணத்தோடு முடிந்து போகின்றன. (எபி. 9:27) இந்த உலகத்தில் நாம் வாழும் காலத்திலே இரட்சிப்பை நாம் மறுத்து விட்டால், நமது பாவங்களுக்கான தண்டனையிலிருந்து தப்பிக்க ஒரு வழியும் இன்றி தேவனிடமிருந்து நிரந்தரமாக நாம் பிரித்து வைக்கப்பட்டிருப்போம் [மத் 25:46; யோவா 5:29; 8:21, 24; மாற்கு 9:43–48]

நமது மரண தண்டனையை தன் பேரில் ஏற்றுக் கொள்ளும் ஒருவர் நமக்குத் தேவைப்பட்டார் இயேசு கிறிஸ்து பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார். (எபி 4:15 ; பேதுரு 2:24). அவர் மரணமடைய வேண்டிய அவசியமில்லாதவராக இருந்தார். எனவேதான் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்த அவர் ஒருவரே நமது பாவங்களுக்காக பலியாகக் கூடிய தகுதியுடையவராகஇருந்தார். "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்;அவர் மாம்சத்திலேகொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1 பேதுரு3:18; மேலும் பார்க்க : ரோமர் 5:8; யோவான் 3:16; மத். 27:45-46; சங். 22:1, 16-18; 24,27-28). சித்திரவதைக்குட்பட்டு மரண தண்டனையை அனுபவித்து மீண்டுமாக உயிர்த்

தெழும் வல்லமை படைத்தவரும் அவர் ஒருவரே. (யோ. 5:26 10:17-18; வெளி 1:18) கிருபாதார பலியாக ஒப்படைக்கப் பட்ட இயேசு கிறிஸ்துவின் வழியாக, தேவன் நீதியுள்ளவரும். இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறார் [ரோமர் 3:26].

கிறிஸ்து எல்லா மக்களுக்காகவும் மரணமடைந்தார். (1 தீமோ. 2:6) சகல மக்களும் இரட்சிப்படைய வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார். (2 பேதுரு 3:9). ஆனால் இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென யாரையும் அவர் கட்டாயப்படுத்த வில்லை. தேவனிடமிருந்து நீங்கள் பிரிந்திருப்பதையோ, அல்லது இயேசு கிறிஸ்துவின் மரணம் உங்கள் பாவங்களைப் போக்க அனுமதிப்பதோ உங்கள் விருப்பம்.

**இயேசு கிறிஸ்துவின் மரணத்தில் ஒரு பாவி தனது இரட்சிப்பின் பலன்களை எவ்வாறு அடைய முடியும்?** பாவியானவன் முதலில் ''நற்செய்தி'' யைக் கேட்க வேண்டும். (ரோமர் 10:17; யோ 5:25). இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, மரணம், உயிர்ப்பு யாவும, நாம் அவர் வழியாக இரட்சிப்பு அடைய முடியும் என்ற ''நற்செய்தி'' யாகும். ''.... அவர் மரணத்தை பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்'' (2 தீமோ. 1:10).

பாவி நற்செய்தியை (சுவிசேஷத்தை) விசுவாசிக்க வண்டும். (மாற். 16:15-16). ''தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்''(யோ 3:16). இவ்வசனத்தில் கூறப்படும் 'விசுவாசம்' என்பதற்கு உண்மைகளை நாம் மனதால் ஏற்றுக் கொள்ளுவது என்று மட்டும் பொருள் அல்ல. ''ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்காதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனிதரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்'' (யோவான் 12:42,43). ''.... பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன. (யாக்கோபு 2:19; பார்க்க: மாற்கு 1:23,24) நமது பாவங்களிலிருந்து நாம் இரட்சிப்படைய நமது விசுவாசம் கீழ்ப்படிதலுள்ள விசுவாசமாக இருக்கவேண்டும் (யாக் 2:17-26; கலா 5:6; ரோமர் 1:5; 6:17-18; 16:26; 1 பேதுரு 4:17; 2 தெச 1:8).

பாவி தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்ப வேண்டும். ''மனந்திரும்புதல்'' என்பது, பாவத்தில் இருந்து விடுபட்டு நீதிக்குப் திரும்ப எடுக்கும் ஒரு முடிவாகும். தேவன், ''....இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்'' (அப். 17:30). தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது (ரோமர். 2:4). தேவனுக்கேற்ற துக்கம் இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது (2 கொரி. 7:10).

தேவனுடைய குமாரனாகிய இயேசுவை கிறிஸ்து என பாவி அறிக்கை இடவேண்டும். இயேசு உயிர்த்து பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் பேதுரு ஆற்றிய முதல் நற்செய்தி உரையில் கீழ்க்கண்டவாறு கூறினார்: ''ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்'' (அப். 2:36). கிறிஸ்துவின் மேலுள்ள நமது விசுவாசத்தை நாம் அறிக்கை செய்ய வேண்டும். ஏனெனில், ''நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்'' (ரோமர். 10:10). இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன்'' என எத்தியோப்பிய மந்திரி கூறினான் (அப். 8:37; மேலும் பார்க்க: மத். 10:32:33; பிலிப் 2:11).

பின்னர், தனது பாவங்கள் மன்னிக்கப்பட பாவி ஞானஸ்நானம் பெறவேண்டும். (அப். 2:38; 8:36; 10:47-48; 22:16; எபே. 5:26) ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' என இயேசு கூறினார் (மாற்கு. 16:16). ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'. என திரளான மக்கள் கூட்டத்தைப் பார்த்து பேதுரு கூறினார். அப். 2:38).

''ஞானஸ்நானம்'' என்றால் ''முழுகுதல்''; தண்ணீரில் அடக்கம் செய்யப்படுதல் என்று பொருள் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும்போது, நற்செய்திக்குக் கீழ்படிய வேண்டி தானும் அவர்களும் என்ன செய்தார்கள் என்பதை நினைவுப் படுத்தினார். ''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்

பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.'' (ரோமர் 6:3-4; பார்க்க : கொலோ. 2:12; கலா. 3 26-27). ஒரு பாவி திருமுழுக்கில் அடக்கம் செய்யப்படும் வேளையில் கிறிஸ்துவின் மரணத்திலும் அவன் ஐக்கியமாகிறான் (ரோமர். 6:5) ஒரு பாவி ஞானஸ்நானம் பெறும்போது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக்கப்பட்டு, அவருடைய மரணத்தின் பலன்களையும் அடைகிறான் : அதாவது **பாவங்கள் மன்னிக்கப்பட்டு புதிய மனிதனாக** மாறுகிறான்! கிறிஸ்துவின் பேரிலுள்ள விசுவாசத்தோடு ஒரு பாவி தன் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் **பெறும்போது** இரட்சிக்கப்படுகிறான் (ரோமர். 6:17-18; எபே. 2:1-9; கெலோ. 2:12; 1 பேதுரு 3:21)

நமது பாவங்கள் அகற்றப்பட்ட நிலையில், பிதாவாகிய தேவனோடும் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுடனும் ஒப்புரவாகிறோம். [1 யோ. 5:11, 12; 2 யோவான் 9; யோவான் 14:23]. திருமுழுக்குப் பெற்ற பின்னரும் ஒரு கிறிஸ்தவன் தடுமாறி பாவஞ் செய்யக்கூடும். என்றாலும், தேவனுடைய வசனத்தின் வெளிசத்தில் ஒரு கிறிஸ்தவன் தொடர்ந்து செல்லும்போது, கிறிஸதுவின் இரத்தம் அவனுடைய பாவங்களை தொடர்ந்து கழுவிக் கொண்டே இருக்கிறது. (1 யோ 1: 7,5). ஒரு கிறின்தவன் நீடித்த விசுவாசத்துடன் மரண பரித்தயம் கர்த்தருடைய சபையில் ஊழியஞ் செய்ய வேண்டும். (அப் 2:42, 47; 4:32, 33 ; 11-23 ; எபே. 1 : 22:23 : 4:3 1-1; 14-16 ; 5:22-33 ; 1 கொரி 9, 27 ; எபி. 3:12-14).

''....மரண பரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' என்று இயேசு வாக்களித்து உள்ளார். (வெளி. 2:10).

நீ தேர்ந்தெடுக்கும் வழி எது? தேவனை விட்டுப் பிரிந்து வாழ்வதா? அல்லது அவருடைய நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் இரத்தத்தில் உன் பாவங்கள் கழுவப்பட்டு, நீ இரட்சிப்படையும் வழியை நாடுகிறாயா? கால தாமதம் ஆபத்தையும் மரணத்தையும் விளைவிக்கும். கீழ்ப்படிவதாலோ **வாழ்வும் மகிழ்ச்சியும்** உனக்குக் கிடைக்கும்!

Royce Frederick **எஸ். எஸ். ராஜன்**

# குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் தேவையா ?

## BAPTIZE BABIES ?

இக் கேள்விக்கான சரியான விடையைத் தெரிந்து கொள்ள நமக்கு ஒரு நிச்சயமான வழி உண்டு. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ள வேதாகமப் புத்தகமே அது, கர்த்தருடைய கட்டளைகளையும் விருப்பங்களையும் நமக்கு அது வெளிப்படுத்துகிறது. (1 கொரி 2:9-13). குழந்தைகள் ஞானஸ்நானத்தைப் பற்றி கர்த்தர் என்ன நினைக்கிறார் எனக் காண்போம்.

முதலாவதாக, உங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் தேவை அல்ல. பாவங்கள் மன்னிக்கப்படவே ஞானஸ்நானம் தேவை (அப் 2:38). பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் அவசியம் (அப். 22:16). குழந்தைகளிடம் பாவம் இல்லை. "பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன் மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல் தான் இருக்கும்." (எசேக்கியேல் 18:20). பெற்றோரிடமிருந்து குழந்தைகள் பாவங்களை சுவீகரிப்பதில்லை. எனவே குழந்தைகளிடம் பாவங்கள் இருப்பதில்லை. நல்லது, கெட்டது எவை என பகுத்தறியும் சக்தியற்ற குழந்தைகளை பாவம் அணுகுவதில்லை. எனவே பாவத்தை அகற்ற வேண்டிய அவசியமும் இல்லை.

அடுத்து, வேதாகமத்தின் போதனையின் பிரகாரம் உங்கள் குழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் தகுதியற்றவர்களாகிறார்கள். ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு ஒருவன் ஒருத்தி விசுவாசிக்க வேண்டும். "**விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.** (மாற்கு 16:16). குழந்தைகள் விசுவாசிக்கும் திறன் அற்றவர்களாயிற்றே !

ஞானஸ்நானத்திற்கு முன்னதாக பாவ மன்னிப்புக்கென்று மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்ப வேண்டும். "**பேதுரு அவர்களை நோக்கி:** நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38) உங்கள் குழந்தைகள் பாவமற்றவர்களாயிற்றே! ஞானஸ்நானம் அவர்களுக்குத் தேவையா?

**JERRIE BARBER**

**ஜெர்ரி பார்பர்.**

# என் ஜெபங்கள் கேட்கப்படுவதில்லையே ஏன்?

## PRAYERS NOT ANSWERED

மேலே கண்ட கேள்வி இன்று பலரால் கேட்கப்படும் ஒன்று. நமது தேவைகள் யாவும் எப்போதுமே ஜெபத்தின் வழியாகக் கிடைப்பதில்லை என்றால், நமது ஜெபங்களை தேவன் கேட்ப-தில்லை என்று அர்த்தமல்ல. ''இல்லை'' அல்லது ''பொறுத்திரு'' என தேவன் கூறுவதும், ''சரி, உன் தேவையைப் பெற்றுக்கொள்'' என அவர் கூறுவதும், நமது ஜெபங்கள் கேட்கப்படுவதின் அறி-குறிகள் தானே?

என்றாலும் சில ஜெபங்களுக்குத் தேவன் பதிலளிப்பதில்லை என்பதற்குக் காரணங்கள் உண்டு :

தேவனோடு ஜெப உறவில் சிலர் வாழ்வதில்லை. அவருடைய கட்டளைகளை தொடர்ந்து மீறி பாவ வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவன் உறவை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை.

**''கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கி-றவர்களுக்கோ கர்த்தர் முகம் விரோதமாயிருக்கிறது''** *(1 பேதுரு 3:12).* பெலவீன பாண்டமாகப் படைக்கப்பட்ட மனைவிமார்களை கனம் செய்யத் தவறும் கணவன்மார்களின் ஜெபங்களுக்குத் தடை ஏற்படும் என 1 பேதுரு 3:7 ம் வசனம் கூறுகிறது.

* சுயநல ஜெபங்களை கர்த்தர் ஏற்றுக்கொள்வதில்லை. **''நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சை-களை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்''** *(யாக்கோபு 4:3).*

* கர்த்தருக்குப் பிரியமாக நடக்கவும், அவருடைய ஆசீர்-வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் அவசியத்தேவை விசுவாசம். விசுவாசமின்றி செய்யும் ஜெபங்கள் பலகீனமானவை **''ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனிதன் தான் கர்த்-தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையா-திருப்பானாக''** *யாக்கோபு 1:6,7)*


(22-ம் பக்கம் பார்க்கவும்)

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-110049.
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2: 5 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays 1- :45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. MM. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

E.Z.S. ராஜநாயகம்
*கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,*
*காங்கயம் - 638 701*

Published by Church of Christ Kangayam and Printed at Jeevasakthi Press, Erode
Editor. E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Dharapuram Road, KANGAYAM-638 701